## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

### Sessions Case No. 25/2022

Deposition of witness for : PW1

Name : வசந்தி

Father's / Husband Name : பழனிசாமி

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Law and recording the Deposition of the Witness on 14th day of October 2024.

**முதல் விசாரணை:–**

நான் சங்ககிரி, மேக்காட்டில் குடியிருந்து வருகிறேன். நான் வீட்டுக் குடித்தனமாக இருக்கிறேன். 1வது எதிரி எனது தகப்பனார். மற்ற எதிரிகளை எனக்கு தெரியாது. இறந்துபோன சேகர் (எ) ராமசாமி எனது அண்ணன். 03.03.2021ம் தேதி இரவு 9.30 மணிக்கு என் அப்பா போன் செய்து, வீட்டிற்கு வருமாறு சொன்னார். அதன்படி நான் வீட்டிற்கு வந்து பார்த்தேன். எனது அண்ணன் வீட்டிற்கு பக்கத்தில் தென்னமரத்து காட்டில் இறந்துகிடந்தார். அதன் பிறகு நான் போலிசாருக்கு தகவல் கொடுத்தேன். போலிசார் கையெழுத்து கேட்டதால் கையெழுத்து மட்டும் போட்டுக்கொடுத்தேன்.

என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து **அ.த.சா.ஆ–P1** ஆகும். எனது அண்ணன் எவ்வாறு இறந்தார் என்று எனக்கு தெரியாது. அது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

(அரசு தரப்பில், சாட்சியை பிறழ் சாட்சியாக அனுமதி கோரியதன் பேரில், சாட்சி பிறழ்சாட்சியாக கருதி அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.)

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எனது அப்பாவிற்கு 7 ஏக்கர் நிலம் உள்ளது. எனது அப்பாவிற்கு நானும், எனது அண்ணன் மட்டும் தான் வாரிசுகள். கடந்த 03.03.2021 ம் தேதி இரவு 9.30 மணிக்கு எனது அண்ணன் இறந்துவிட்டதாக பதற்றத்துடன் எனது அப்பா தொலைபேசியில் சொன்னார் என்றும், நானும், எனது கணவரும் சென்று பார்த்தபோது எனது அண்ணன் ஏதோ காரணத்திற்காக ஆயுதத்தால் எனது அண்ணனை கொலை செய்துள்ளார்கள் என்றும், அது சம்மந்தமாக சங்ககிரி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றும், தற்போது 1ம் எதிரி எனது தகப்பனார் என்பதால் எதிரிகளுக்கு சாதகமாக உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

சுமார் இரவு 10.00 மணிக்கு நான் தகவல் தெரிந்து சம்பவ இடம் சென்றேன். எனது அண்ணன் பிரதேத்தை மருத்துவமனைக்கு எப்போது எடுத்து சென்றார்கள் என்று எனக்கு தெரியாது.

ஒம்/– L. கலைவாணி
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.